51

மாலை—மலர் 4

பாலிகா போதம்

21 AUG 1924

மாஜி "ஆரியா" பத்திரிகாசிரியர்

தி. அ. சாமிநாத ஐயர்

எழுதியது

கார்டியன் அச்சுக்கூடம்

மதராஸ்

1924

[Price Annas 4

R4
N24

67786

பால நீதி மாலை.—மலர் 4

பாலிகா போதம்

2[illegible] AUG 1924

மாஜி "ஆரியா" பத்திரிகாசிரியர்

தி. அ. சாமிநாத ஐயர்

எழுதியது

கார்டியன் அச்சுக்கூடம்

மதராஸ்

1924

Copyright Registered]

[Price Annas 4

170 . 63
110

Printed at
The Guardian Press,
Madras.

67786

R4
N24

முகவுரை

ஆண்பிள்ளைகளும் பெண்பிள்ளைகளும் சாமானியமாகத் தெரிந்துகொள்ளவேண்டிய ஒழுக்க முறைகள் 'பாலபோதம்' 'நீதி சாஸ்திரம்' முதலான நூல்களில் விவரிக்கப்பட்டிருக்கின்றன. பெண் பிள்ளைகளுக்கெனத் தனியே சொல்லத்தக்க விசேஷமான ஒழுக்கமுறைகள் இந் நூலில் தொகுக்கப்பட்டிருக்கின்றன. எடுத்துரைக்கத்தக்க ஸ்திரீ தர்மங்கள் சிலவேயாயினும் அவை பிள்ளைகளின் வயதுக்கும் பயிற்சிக்கும் ஏற்றவாறு மூன்று பகுதிகளாக இந் நூலில் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஒரு பகுதியிற் கூறிய விஷயங்கள் சில மற்றோர் பகுதியிலும் காணப்பெறினும் அவை வயதுக்குத் தக்கபடி வற்புறுத்தும்பொருட்டு வரையப்பட்டனவாகக் கொள்க.

"அகஸ்தியாசிரமம்"
சென்னை
1924ஸு ஏப்ரல்மீ 27உ

தி. அ. சாமிநாத ஐயர்

பாலிகா போதம்

I

1. நல்ல நடவடிக்கையுள்ள மாதர்க்கு லக்ஷ்மீதேவி, பூமாதேவி, நீளாதேவி*, பார்வதீதேவி, ஸரஸ்வதீதேவி ஆகிய இவர்கள் எல்லாச் சுபங்களையும் அளிப்பார்கள், எல்லா ஐசுவரியங்களையும் அருளுவார்கள்.

2. சாஸ்திரங்களிற் சொல்லப்படுகிற ஸ்திரீ-தருமம் ஒவ்வொன்றையும் பெண்பிள்ளை கடைப்பிடித்து, யாவரும் வியக்கத்தக்கவாறு அவைகளை அநுஷ்டிக்கவேண்டும்.

3. பெரிய மனிதர்வீட்டுப் பெண் பிறந்தகத்தில் இருக்கும்போது ஆடல் பாடல்களிலாவது வேறெந்தக் காரியத்திலாவது கெட்டபெயர் படைக்காமல், தன் குடும்பத்தவர்களுடைய கௌரவத்திற்குக் குறைவு உண்டாகாதவாறு யுக்தாயுக்தமறிந்து நடந்துகொள்ளவேண்டும்.

4. காலை மலர் முகத்தாய்! † கணவன், மாமி, மாமனார் ஆகிய இவர்களுக்குத் தக்கபடி சேவை செய்து, இவர்களுடைய சந்தோஷத்திற்கு உரியவளாவதே எப்பொழுதும் பெண்பிள்ளையின் தருமமாம். பெண்கள் இதனைத் தெரிந்து ஞாபகத்தோடு நடப்பார்களாக.

---

* நீளாதேவி.—விஷ்ணுமூர்த்தியின் சத்தி.

† காலை மலர்.—தாமரை.

5. குமாரி! கணவனுக்கு இஷ்டமில்லாத காரியத்தை ஒருபோதும் செய்யாதே, மைத்துனன் முதலானவர்களி னெதிரில் நில்லாதே, எவரிடத்தும் கோபங்காட்டாதே.

6. குழந்தாய்! உலகத்தில் புருஷர்களெல்லாரையும் அண்ணன் தம்பிகளென மதித்துநட, கணவனைத் தெய்வமெனக் கருது, நாத்தி முதலானவர்களைத் தங்கை தமக்கைகளெனத் தெரி, மாமன் மாமிகளைத் தந்தைதாயெனத் தொழு.

7. கணவனுக்குக் கால் வருடல் முதலான பணிவிடைகளைப் பாங்காகச் செய்து, அவன் உறங்கினபின் உறங்கி, அவன் எழுமுன் எழுவதே மனைவியின் தருமமாம்.

8. பெண்ணே! புருடன் ஏதாவது கொண்டு வந்தாலும், கொண்டுவராவிட்டாலும், கொடுத்தாலும், கொடுக்காவிட்டாலும் அவனைத் திரஸ்கரிக்காதே. திரஸ்கரிப்பாயானல், தப்பு உன்மீது தோன்றும். அந்த வார்த்தைகள் வெளிப்படும், அதனல் வீட்டில் கலகம் விளையும்.

9. கணவனுடைய தங்கைமார், தமக்கைமார், தாய்மார், தம்பிகள், தமயன்கள், மைத்துனரின் குமாரர்கள், மற்றுமுள்ள பெரியோர்கள் வந்தால் நீ உட்கார்ந்திருக்கும் மணை மஞ்சம் திண்ணை முதலானவைகளை விட்டு விரைந்து இறங்க வேண்டும், அம்மா! அது மரியாதை.

10. உரத்தகுரலோடு வார்த்தைசொல்லாதே, மாமிக்கு ஒரு போதும் எதிர்பேசாதே. அவள் கோபித்தாலும் நீ கோபங் கொள்ளாதே. அவ

ளுக்குச் செய்யவேண்டிய மரியாதைகளிலும் உப சாரங்களிலும் கொஞ்சங்கூடக் குறைவு செய் யாதே. அவளிட்ட கட்டளைகளை மீறி நடக்காதே. அவள் ஏவிய காரியங்களைத் தப்பாமற் செய்.

11. கணவன் சொல்லுங் காரியம் ஒரு வேளை யுக்தமல்லாததாக இருந்தால், அந்தக் காரியத் தைச் சற்றுத் தாமதப்படுத்தி, அவனுடைய சமயம் பார்த்து, அதனுல் விளையத்தக்க கெடு திகளை விநயமாக அவனுக்கு விண்ணப்பஞ் செய்.

12. கண்டுக் குயர்ந்த கனி மொழியே! * கணவன் கோபங்கொண்டு உன்னைத் திட்டினுல் நீ அவனைத் திருப்பித் திட்டாதே, கோபமுங் கொள்ளாதே. சிறிது நேரத்திற்குப்பிறகு அவன், கோபந்தணிந்து, தான் திட்டியது தவறெனத் தெரிந்து இரங்குவான். நீ இப்படி நிதானமாக நடந்துகொண்டால் பிறந்த வீட்டிற்கும் புகுந்த வீட்டிற்கும் நற்கீர்த்தி விளைவிப்பாய்.

13. கணவனிடத்தில் பொய் ஒருபோதும் சொல்லாதே. கணவன் உன்னைத் தண்டிக்கும் போதும் கண்டிக்கும்போதும் இரைச்சல் போட்டு அழாதே. நற்புத்தி மேற்கொள்; எந்தக் காரியஞ் செய்வதிலும் அழாமல் கோபத்தையும் துக்கத் தையும் தவிர்த்து நீ செய்யவேண்டிய காரியங் களில் மனத்தைச் சீக்கிரமாகச் செலுத்து.

14. மடமயிலே! மந்திரம், ஜபம், கங்கா ஸ்நானம், தவம், நோன்புகள், தானதருமங்கள்,

---

* கற்கண்டைவிட இனிமையான வார்த்தைகளைச் சொல்லு கிறவளே!

புண்ணிய புராணங்கள் இவை யெல்லாம் பதி-பக்திக்குச் சிறிதும் ஈடாகா.

15. மருமலர்வாழ் மானே! * மாமியாவது நாத்தியாவது மாமனாவது புருடனாவது மைத்துனனாவது உத்தரவு கொடாவிடத்து மருமகள் சுதந்திரமாகத் தனித்து அன்னயல் வீடுகளுக்கு எதன் நிமித்தமும் போகக்கூடாது.

16. குமாரி! 'தாயாரைத் தண்ணீர்த் துறையில் பார்த்தால் மகளை வீட்டுக்குப் போய்ப் பார்க்க வேண்டியதில்லை' என்னும் பழமொழியைக்கேட்டிருக்கிறாயல்லவா? மகள் கெட்டவளா யிருந்தால் அந்தக் குற்றம் தாயாரைச் சாரும்; தாயாரைக் கெட்டவ ளென்பார்கள். தாய் தந்தையருக்குக் கெட்டபெயர் வரா வண்ணம் நீ நடந்து கொள்வாயாக. அது உன் பொறுப்பு.

17. தாயாருக்கு இரண்டு வசைமொழிகளையும் தந்தைக்கு இரண்டு வசைமொழிகளையும் கணவன் முதலானவர்கள் கூறும்படி செய்கிற பெண் உலகத்தில் எதற்கும் பயன்படாள். அப்படித் தாய் தந்தையருக்குக் கெட்ட பெயர் வருவிக்கும் மகள் பூமியின்மீது பிறவாதிருத்தலே நலமென்று ஜனங்கள் நிஜமாகச் சொல்வார்கள். அவள் இருந்தென்ன, இறந்தென்ன?

18. கணவனுடைய தமயன்பிள்ளைகளிடத்தும், தம்பிபிள்ளைகளிடத்தும் அதிகமானபிரேமை கொண்டு நடப்பதே தகுதி. அப்படி நடக்கும் பெண்களுக்குஉலகத்தில்நல்லபெயர் உண்டாகும்.

---

* சுவாசனையுள்ள மலர் சூடியவளே!

19. பருவமயிலே! புருஷன் செல்வவானு யிருக்கையில் அவனுடைய மனமறிந்து மனைவி நடந்துகொள்வாள். இது உலகத்தில் எல்லாருக்கும் இயல்பே. அவன் ஏழைமைவாய்ந்தபோதும் அதே மாதிரியாக நடந்துகொள்கிறவளுக்கே நல்ல பெயர் உண்டு.

20. தாய் தந்தையரும் அண்ணன் தம்பிமாரும் எவ்வளவு பெரிய பாக்கியவந்தர்களானுலும் ஸ்திரீயானவள் தன் கணவனுடைய வீட்டை விட்டு அவர்களுடைய வீட்டிலேயே எப்பொழுதும் இருப்பது மரியாதை யன்று; வாழ்க்கை முறையு மன்று.

21. கணவனுடைய வீட்டில் வயிறு நிரம்ப அன்னமும், நல்ல வெஞ்சனங்களும், ஆபரணங்களும், நல்ல ஆடைகளும் அதிகமாகக் கிடைக்கவில்லை யென்று ஸ்திரீயானவள் முரண்டு கணவனேடு ஒருபோதும் கலகிக்கலாகாது.

22. பிள்ளை குட்டிகளைப் பெற்றுக் குடித்தனஞ் செய்ய விரும்புகிற ஸ்திரீ தன் வீட்டுக்குரிய வரவு செலவுகளை யறியாமல், ‘அது இல்லை, இது இல்லை’ என்று குறைகூறிக்கொண் டிருக்கலாகாது. அதனுல் அவள் கலகக்காரியாகிக் கெடுவாள், கஷ்டங்களை யனுபவிப்பாள்.

23. புருஷனுக்கும் மாமன் மாமிகளுக்கும் இஷ்டமில்லாத காரியங்களைச் செய்யக்கூடாது. தனக்கு அனுகூலமாக இல்லாவிட்டாலும் அவர்களுக்கு இஷ்டமாயுள்ள காரியத்தைச் செய்யவேண்டும். இப்படி நடந்துவந்தால் வாழ்

நாள் முழுதும் குற்றமும் கெட்டபெயரும் இல்லாமல் எல்லாரும் மெச்ச வாழலாம்.

24. குழந்தாய் ! கெட்ட வழிகளுக்குப் போகாதே. கெட்ட காரியங்களில் தலையிடாதே. கூடிக் கலந்து உறவுகொண்டு, இலைகளிற் பிஞ்சு அடங்கி யிருப்பதுபோல், அடக்கமாக இருப்பாயாயின் உலகத்தில் உனக்குச் சுபமுண்டாகும்; நீ நல்லவளென யாவருந் துதிக்க விளங்குவாய்.

25. மகளே! மாமியினிடத்தும் நாத்தியினிடத்தும் உனக்கு உண்டாகிய கோபத்தை அவர்கள்மீது காட்டமாட்டாமல் மனம்நொந்து உன் குழந்தையின்மீது காட்டி யவனை யடித்து அழவிடாதே. அதனால் விளையும் தீமையும் துன்பமும் உனக்கேயாகும். இவ் விஷயத்தை ஆலோசித்துப் பார்த்து அப்படிச் செய்யாதிரு.

26. பதியுடன் கூடிவாழும் வாழ்வே மகளிருக்கு வாழ்வெனத் தகும். பதியில்லாத வாழ்வு பதிவிரதைக்கு வாழ்வாகுமோ? ஆகாது. பதியை யிழந்தவள் இருந்தும் இறந்தவளே போல்வாள்.

27. கணவனுடைய அன்புக்கும் ஆதரவுக்கும் உரியவளாயிருக்குங் காரணத்தால் கர்வித்து, பெண்ணே! வீட்டிலுள்ள மாமன் மாமி முதலானவர்களை அலக்ஷ்யம்பண்ணாதே, அவர்களைத் திரஸ்கரிக்காதே, துஷ்டத்தனமாக நடக்காதே. உன்னைப் போன்ற பெண்கள் அது தப்பான காரிய மென்று இகழ்வார்கள்.

28. பர்த்தாவின் திருவடித் தாமரைகளே தன் பிராணன்களெனத் தன் மனத்தில் தியானித்

துக்கொண் டிருக்கும் பாரியைக்கு இலக்ஷ்மீவல் லபனாகிய விஷ்ணுவின் பாதசேவை கிட்டும்.

29. பெண்ணானவள் நற்குண சீலமுடைய வளாய் விவகரிப்பாளானால், பிறந்தகத்தார் பதினாயிரம் வராகன் கொடுத்து ஆதரிப்பதைவிட அதிக கௌரவமும் பெருமையும் உண்டு. கையில் உனக்கு ஒரு காசு இல்லாவிட்டாலும் குடித்தனஞ் செய்யும் விதமறிந்து, பெண்மயிலே! பக்குவமாகக் குடித்தனத்தை நடத்து.

30. எவ்வளவு சொத்தும் நகையும் பணமும் உடையவளானாலும் பெண்ணானவள் கெட்ட நடவடிக்கையுள்ளவளாயிருந்தால் அவளுடைய உறவினர்களெல்லாரும் உலகத்தாரால் துஷிக்கப் பெற்று எப்பொழுதும் துக்கிப்பார்கள்.

31. நல்லாய்! பிறந்தகத்தாருக்குக் கெட்ட பெயர் விளைவிக்காதே. புக்ககத்தில் உனக்கு உள்ள கஷ்டங்களைப் பிறந்தகத்திற் சொல்லாதே. அப்படிச் சொல்வாயானால் உலகத்தவர் உன்னைத் துஷ்டை யென்பார்கள். அதுவே பெரிய கலகத்துக்குக் காரணமாகும்.

32. வேலைக்காரிகள் நீ ஏவுகிற காரியங்களை யெல்லாஞ்செய்து உனக்குஎவ்வளவுஇதமாயிருந்தாலும் அவர்களுடைய சுபாவத்தைத் தெரிந்து கொள்ளாமல், அல்லார் குழலே !* அவர்களுக்கு இடங்கொடுக்காதே.

33. நாத்திமாருக்கு, குல தேவதைகளுக்கு இடுவது போல, உனக்குள்ளதில் அற்பமாவது

* கருமையான கூந்தலுடையவளே!

சொற்பமாவது கொடுக்காவிட்டால் கலகம் உண்டாகும். அதனால் கேடு விளையும். அவர்கள் குல-தேவதைகளென்றே தெரி.

34. செல்வக் குமரீ! பொழுது சாய்ந்தவுடனே படுத்து உறங்கத் தலைப்படாதே. அதனால் மாந்தியம் (மந்த புத்தியும் சோம்பலும்) வளரும்; வீட்டிலுள்ளவர்கள் கோபிப்பார்கள். உன்னைப் போன்றவர்கள் உன்னை மட்டி (மண்ணை) என ஏசுவார்கள். அது வெட்கமில்லையா ?

35. வீட்டு இரகசியங்களை அயலாருக்குச் சொல்லாதே. அதனால் உன் வீட்டிலுள்ளவர்களுக்குக் கஷ்டம் உண்டாகும். அவர்கள் கோபித்து உன்னை வீட்டிலிருந்து துரத்த வேண்டிவரும்; பெருந்துன்பம் விளையும்.

36. விடியற் காலத்தில் கொஞ்சம் இருள் இருக்கும்போதே எழுந்து, வெளிச்சமாகு முன்னரே காலைக் காரியங்களை யெல்லாம் செய்து முடி. நன்றாகப் பொழுது விடிந்தபிறகு எழுந்து செய்யத் தொடங்குவாயானால், தெருவிலுள்ளவர்கள் ஏளனஞ் செய்வார்கள்.

37. இவ்விடத்து வார்த்தையை அவ்விடத்தும், அவ்விடத்து வார்த்தையை இவ்விடத்தும் சொல்லாதே. அப்படிச் சொல்வாயானால் ஒருவர்க் கொருவர் விரோத முண்டாகும். அதனால் உன்னை எல்லாரும் கலகக்காரி யென்பார்கள்.

38. வேலை யொத்த கண்ணாய் ! எப்பொழுதும் தலைவாயிலில் நிற்காதே. எவ்வளவு நித்திரையில் அமர்ந்திருப்பினும் ஜாக்கிரதையாக

(விழிப்பாக) இரு. நடந்து கொண்டிருக்கை யில், கூந்தலை அவிழ்க்காதே.

39. 'அவர்களுக்கு அவை இருக்கின்றன, நமக்கு ஒன்றும் இல்லாமற் போயிற்றே, ஐயோ!' என்று எப்பொழுதும் குறை யெண்ணி மனம் நொந்துகொண் டிருக்கலாகாது. உள்ளதைக் கொண்டு திருப்தி யடையவேண்டும். குறையெண்ணிக் குன்றுதல் தப்பெனத் தெரி.

40. மானிட ஜன்ம மெடுத்திருக்கிறோ மாதலால் நாமெல்லோரும் சிலநாள் சுகத்தையும் சிலநாள் கஷ்டத்தையும் அனுபவிக்க வேண்டி-யவர்களாகவே இருக்கிறோம். இது எவருக்கும் தப்பாது. எப்பொழுதும் சுகமே வேண்டுமென்றால் அது கிட்டாது. பௌர்ணமியை யடுத்த தினங்களில் நிலாவும், அமாவாசையை யடுத்த தினங்களில் இருளும் எப்பொழுதும் உண்டாகும்.

41. நல்லாளே! ஒருபோதும் மற்றொருவரோடு போட்டி போட்டுக் கொண்டு வேலைசெய்யாதே, சபதங்கள் கூறாதே. பேசும்பொழுது ஆணையிடாதே. கிழக்குமுகமாக இருந்து பல்லைத் துலக்காதே. எவருடைய இரகசியங்களையும் வெளியிடாதே.

42. பூம்பாவாய்! நீ நடக்கும்போது உன்னுடைய காலடிச் சத்தம் கேளாதிருக்கவேண்டும். நீ காலடி வைப்பதனால் தரையில் பள்ளம் தோன்றக்கூடாது. இப்படிப்பட்ட ஸ்திரீதர்மங்களை யறிந்து நடந்துகொள்வாயாக.

43. பெண்ணானவள் அடிக்கடி சிரிக்கலாகாது. அரிதாக ஒருவேளை சிரித்தால் கொஞ்ச

மாகப் புன்னகை கொள்ளவேண்டும். இப்படியல்லாமல் பற்கள் வெளியே தெரியும்படியாக மடமடவென்று சிரிக்கக் கூடாது.

44. சுவாசினி! எத்தனை ஆடையாபரணங்கள் இருந்த போதிலும், கணவன் எவ்வளவு பிரேமையுடன் பெருமைப்படுத்திப் பாராட்டின போதிலும் மங்கலமாதானவள் மஞ்சளினாலும் குங்குமத்தினாலும் தன்னை நன்றாக அலங்கரித்துக்கொள்ள வேண்டும். அது நாஜூக்கு அன்றென்று அவைகளைத் தவிர்க்கக் கூடாது.

45. கெண்டைவிழி மாதரசே! கெட்டவர்களோடும் வேசிகளோடும் குச்சுக்காரிகளோடும் சகவாசஞ்செய்யாதே. நல்ல நடவடிக்கையுள்ள உத்தம மாதர்களின் பாதங்களை எப்பொழுதும் மனத்தில் நினைத்துப் பணிந்து நல்லொழுக்க நடந்துகொள்வாயாக.

46. கொஞ்சம் அதிகமாக வேலை நேர்ந்த போது வெறுப்புக்கொள்ளாதே. வேலைக்காரர்களை அதிகமாகக் கோபித்துக் கொள்ளாதே. கணவனிடத்தில் வெடுவெடுப்புக் காட்டாதே. மாக ஒருபோதும் பொய் சொல்லாதே.

47. மற்றொருவரை ஏளனஞ் செய்யாதே. பிறர் சொல்லும்வார்த்தையைத் தடுத்து அவர்களுக்கு இடங்கொடாமல் அவசரப்பட்டு உன்போக்காகவே பேசிக்கொண்டு இராதே. ஒருவரோடும் சண்டை செய்யாதே. தடையில்லாமல் எங்குந் திரியாதே. ஒருவர்மீது கோட் சொல்லாதே.

48. சாப்பாட்டுக்கு உட்கார்ந்தவர்களின் வரிசையில் ஒருவருக்கு அதிகமாகவும் மற்றொருவ

ருக்குக் குறைவாகவும் இடாதே. அப்படிப் பக்ஷபாதஞ் செய்தல் பெரும்பாவம். ஏழைகளை யும் செல்வவான்களையும் ஒரே மாதிரியாக உபசரி. பெரியவர்களுக்குப் பெரிய மணையும் எளியவர்களு க்குச் சிறியமணையும் போடாதே.

49. சிக்குப்பிடித்த கூந்தலும், குப்பை கூளங்கள் நிறைந்த வீடும், அழுக்குப்படிந்த ஆடையும் தரித்திரத்திற்கு மார்க்கங்களாம். ஆத லால், கூந்தலையும் வீட்டையும் ஆடையையும் சுத்தமாகவும் ரம்மியமாகவும் வைத்துக்கொள். இவைகளை அழுக்கில்லாமல் காத்துக்கொள்ளாத வர்கள் எவ்வளவு செல்வமுடையவர்களானாலும் ஈனஸ்திதியடைந்து கஷ்டப்படுவார்கள்.

50. அம்மிக் கல்லையும் திரிகைக் கல்லையும் காலால் உதைக்கலாகாது. அவைகளில் இலக்ஷ்மி இருக்கிறாள். ஒருவேளை அவைகளின்மீது கால் பட்டால், அவைகளைத் தொட்டுக் கண்ணில் ஒத் திக்கொள்.

51. வடுக்கண்ணாய்! * விளக்கு ஏற்றும் பொழுது அதனில் ஒரு சிறு குச்சியைப் போட்டு வைத்துக் கையில் எண்ணெய் படாமல் வத்தி யைத் தூண்டவேண்டும். விளக்கின் எண்ணெய் கையில் பட்டால் பாபமாகும். இதனை நீ மனத் தில் ஞாபமாக வைத்துக்கொள்.

52. மகளிர்க்கு வீட்டுப் பண்டங்களின்மீது ஏமாறாத ஜாக்கிரதை இருக்கவேண்டும். காரியங் களில் சுறுக்குத்தனம் இருக்கவேண்டும். சாது ஜனங்களினிடத்தில் அவர்களைப் பூஜிக்கும் பக்தி

* வடு=வாள்.

இருக்கவேண்டும். திக்கில்லாதவர்களிடத்தில் கருணை இருக்க வேண்டும்.

53. மூத்து குமாரி! ஒருவர் சொன்னாலும் சொல்லாவிட்டாலும் நீ செய்யவேண்டிய வேலை களை யெல்லாம் பிறர் மெச்சத்தக்க விதமாகத் தப் பாமற் செய்யவேண்டும். அப்படிச் செய்யாவிட் டால் எவ்விடத்தும் உனக்குக் கேடு விளையும்.

54. தையலே! பிறருக்கு எச்சிற் சோற்றை யிடாதே, காலின் மெட்டிகள் கங்கென்று ஒலிக் கும்படி செய்யாதே, எவ்வளவு லாபம் வருவதனு லும் திருட்டுத்தனஞ் செய்யாதே.

55. 'பொறுத்தார் அரசாள்வார், பொருதார் காடுறைவார்' என்பதை மறவாதே. இப்பொ ழுது கஷ்டங்களைப் பொறுத்துக்கொள்கிறவர்கள் இனிச் சுகபோகங்களை யனுபவிப்பார்க ளென் னும் சந்தோஷ வார்த்தையை உன் மனத்தி லெண்ணி, லாந்தருக்குள் ளிருக்கிற தீபத்தைப் போலப் பிரகாசிப்பதற்குப் பிரயத்தனப்படு.

56. இளப்பிடியே !* உலகத்தில் ஸ்திரீயான வள் தன் வயிற்றை மறுத்துக் கட்டியாவது தன் வீட்டுக்கு வந்த அதிதிக்கும் உறவினர்க்கும் வயி ருர அன்னமிட்டு நற்பெயர் படைப்பாள். அவ ளுடைய கீர்த்தியை எவரும் கொண்டாடுவார்கள். அவளுக்கு இம்மைச் சுகமும் மறுமைச் சுகமும் வாய்க்கும். அவளுக்கு எவரும் ஈடாகார்.

57. கெட்டவளென்று பெயர் எடுப்பதற்கு வெகுநேரம் வேண்டாம், ஒரு நாழிகைகூட வேண்டாம். மாதர்களுள் மிக்க நல்ல குண

* பிடி.—பெண் யானை.

முடையவளென்று பெயரெடுப்பதே கஷ்டம். ஆனதனால், யோக்கியமானவ ளென எல்லாரும் மெச்சத் தகுந்த வழிவகைகளை நீ கற்றுக் கொள்வதே கனகாரியம்.

58. ஒருவருக்கு நீ செய்த உபகாரங்களை ஒருபோதும் சொல்லாதே. அப்படிச் சொல்வதைப் பெரியவர்கள் ஒப்பார். உன்னுடைய பெருமைகளைச் சொல்லிக்கொள்வது, தார்குழலே !* தப்பே யாகுமென்று தெரி.

59. உனக்குப் பசி எவ்வளவு அதிகமா யிருந்தாலும் பலரோடு உட்கார்ந்து சாப்பிடும்போது அவர்களுக்கு முன்னால் புசிக்காதே. உடன் மாதரும் உறவினரும் அது சரியான காரியமென்று ஒருபோதும் ஒப்பார்.

60. உனக்கு அதிகாரமில்லாத காரியங்களில் தலையிட்டு அதிகாரஞ் செய்யப் போகாதே. அதனால் உன் கணவன் முதலானவர்களுக்குக் கோபம் அதிகமாகும். அந்தச் செய்தியைக் கேட்ட பேரியோர் சந்தோஷப்படார்.

61. பணிப்பெண்ணாக ஒருவரிடத்து அமர்ந்தேனும் உத்தம ஸ்திரீயானவள் இக்கட்டுப் படும் தன் கணவனுடைய கஷ்டங்களைத் தீர்க்கப் பிரயத்தனப் படுவாள். அப்படிப் பட்டவள் பெருங்கீர்த்தி யுள்ளவளாவள். இவ் விஷயத்தில் அரிச்சந்திரனுடைய மனைவியாகிய சந்திரமதிதேவியை மனத்தில் நினைத்துக் கொள்.

* பூமாலையணிந்த கூந்தலுடையவளே !

62. உன்னைவிட எளியாரை நோக்கி அவர்களுடைய நிலைமையைப் பார்க்கிலும் உன் நிலைமை மேலானதென்று நினைத்துச் சந்தோஷிக்க வேண்டுமே யல்லாமல், உன்னை விடப் பாக்கியவதிகளைப் பார்த்து அவர்களைப் போல உனக்கு 'அவை இல்லை இவையில்லை' என ஒருநாளும் மனம் நோகலாகாது.

63. கர்வித்துத் தலை நிமிர்ந்து நடக்கலாகாது. பிறருடைய நடக்கையைப் பார்த்துக் குற்றங்கூறலாகாது. நிஷ்டூரமான வார்த்தைகளையும் அமங்களமான வார்த்தைகளையும் சொல்லலாகாது. தனக்குத் தோன்றிய வரையில் பிறர்க்கு நல்ல போதனைகளையே செய்யவேண்டும். அதனால் க்ஷேமம் எப்போதும் உண்டு.

64. நியாய புத்தியுள்ள நற்குமாரி! எவ்வளவுகோபம் வந்தபோதும் அப்போதுசொல்ல வேண்டு மென்று நீ நினைக்கிற வார்த்தையை அப்பொழுது சொல்லாதே; சில நாட் கழித்துச் சொல்வே னென்று எண்ணி மனத்தில் பொறுமைகொள்.

65. எப்பொழுதும் சண்டை போட்டுக்கொண்டிருக்கிற வீட்டில் ஸ்ரீ மகாலக்ஷ்மி நிற்கமாட்டாள். ஆதலால், எப்பொழுதும் எவ்விதமான கலகமும் இல்லாமல் இஷ்டமாக எல்லாருடனும் கலந்து குலாவிக்கொண்டிருக்கக் கற்றுக்கொள்வாயானால் உனக்கு க்ஷேமம் உண்டாகும்.

66. வியாழக் கிழமையிலும் வெள்ளிக் கிழமையிலும் ஸ்ரீ மகாலக்ஷ்மி வீட்டுவாயிலில் நிலை

கொண் டிருப்பா ளாதலால், அந்தத் தினங்களில் அவ் விடத்தில் நன்ருக மெழுகி மாக்கோல மிட்டுக் குருபக்தியோடு கூடினவளாய் விவகரிப்பாயாளுல், உனது குறைகள் நிறைவாகும், சம்பத்து செழிக்கும்.

67. அணங்கரசே! * அபகீர்த்தி யடைவது கஷ்டமான காரியமன்று. அரைக் கணத்தில் அபகீர்த்தியடையலாம். சஞ்சல குணங்கள் உன்னைவிட் டொழியும்படியாக நற்கீர்த்தியைச் சாமர்த்தியமாகப் பெறுவாயாக.

68. நங்கையே! நகைகள் முதலான வஸ்துக்களையும் ஆடைகளையும் பெருமையின் பொருட்டு (டம்பத்தின் பொருட்டுப்) பிறரிடம் இரவல் வாங்காதே. ஒருவேளை இரவல் வாங்கிக்கொள்ள வேண்டிவந்தால் அவைகளை உன்னுடைய ஆவசியகம் தீர்ந்தவுடனே அவர்களிடம் திரும்பச் சேர்த்துவிடு; இல்லாவிட்டால் அபவாதம் விளையும். அவை போனால், நஷ்டங்கட்டிக் கொடுப்பது கஷ்டம்.

69. திரவியம் முதலியவைகளினுல் பெரும் பதவி வந்ததென்று ஒருபோதும் கர்வப்படாதே. அந்தப் பெரும்பதவி பேரய்விட்டால் எல்லாரும் கைகொட்டி ஏளனஞ் செய்வார்கள். நீ செய்த காரியம் தப்பென்று தண்டதாருகிய யமதர்ம ராஜனும் உன்னைத் தண்டிப்பான்.

70 சுமதியும், சந்திரமதியும் தமயந்தியும், சீதாதேவியும், துரௌபதியும், இவர்களைப்

* பெண்களிற் சிறந்தவளே!

போன்ற புண்ணியாங்கனைகளும் எத்தனையோ கஷ்டங்களை வரிசையாக மேலும் மேலும் அனுபவித்தபோதிலும் விதிவழுவாமல் தங்களுடைய பதிவிரதா தருமத்தைக் காப்பாற்றிக் கொள்ளவில்லையா ? அவர்களுடைய ஒழுக்கத்தை உன்னிப்பார்.

71. சுமதி என்பவள் தன் கணவன்பொருட்டுப் படாத கஷ்டங்களைப் பட்டு இழிஞர்களுக்கு ஊழியஞ் செய்ததையும், சூரியோதயமானல் தன்கணவன் இறந்து போவான் என்னும் திகிலினுல் சூரியோதயத்தைத் தன் பிரபாவத்தினுல் தடுத்ததையும், எத்தனை கஷ்டங்கள் நேர்ந்தபோதிலும் கணவனைக் காப்பாற்றிக்கொண்டு தன் பதிபக்தியை வெளியிட்ட விவரத்தையும் நினைத்து ஞாபகப் படுத்திக்கொள்.

72. ஸரஸ்வதி தன் பர்த்தாவாகிய பிரம்மதேவருடைய வாக்கில் (முகத்தில்) வசிக்கின்ருள். பார்வதி தன் நாதராகிய சங்கரருடைய பாதியுடம்பா யிருக்கிருள். மகாலக்ஷ்மி தன் நாயகனுகிய விஷ்ணுவினுடைய மார்பில் குடியிருக்கின்ருள்—என்பதை ஆதரவுடன் ஆலோசித்துக் கணவனிடத்தில் பக்தி கொள்.

73. கணவனுக்கு அன்னமிடும்போது, தான் பெற்ற குழந்தைக்குத் தாயைப்போல நீ பிரேமையுடன் பரிமாற வேண்டும் எந்தக் காரியத்திலும் மட்டித்தனம் இல்லாதிருக்க வேண்டும்.

74 ஏதாவதொரு காரியத்தை ஆலோசிக்கும்போது சமயத்திற் கேற்ற விஷயங்களில்

மந்திரியைப்போல நன்மைதீமைகளை யெடுத்து உரைக்கவேண்டும். அப்படிச்செய்யும் பெண்டிர்க்கு மானிட உலகத்தில் நற்கீர்த்தி உண்டாகும்.

75. செய்ய மடமயிலே!* செல்வமிக்கவருடைய பெண்ணானலும் வீட்டுக் காரியங்களைச் செய்யும்போது சம்பளத்திற்காக உழைக்கும் வேலைக்காரியைப்போல் உடம்புவளைந்து வேலை செய்யவேண்டும். அதனால் பெருமை உண்டாகும்.

76. தான தர்மங்களைச் செய்யும்போதும், நோன்பு முதலான புண்ணிய காரியங்களைச் செய்யும்போதும், பண்டிகை முதலானவைகளைக் கொண்டாடும்போதும் அதிகமாகச் செலவு செய்து துக்கத்திற்கும் கஷ்டத்திற்கும் ஆளாகாமல் தம்முடைய சக்தியையுணர்ந்து அதனை மீருமற் செய்யவேண்டும். இதுவே யோக்கியமான பெண்டிரின் லக்ஷணம்.

77. கட்டழகு செய்ய நற்காரிகையீர்!† கஷ்டம் எவ்வளவு நேர்ந்தபோதிலும் பூமியைப் போலப் பொறுமை மேற்கொண்டிருக்க வேண்டும். நியாய மார்க்கத்தில் நடந்துகொள்கிற ரமணியே உலகத்தில் இல்லாள் எனப்படுவாள்.

78. இவ்விதமாக நடந்துகொள்ளப் பயின்ற காந்தாமணியே பூலோகத்தில் கீர்த்தி பெறுவாள். நிந்தைகள் அவளை அணுகா. கோரமான பாபங்களெல்லாம் அவளைச் சாராமல் நசிக்கும். அவள் புண்ணியவதியே யாவாள்.

---

* அழகிய பெண்மயிலே!

† பேரழகு வாய்ந்து சிறப்புற்ற நல்லமாதர்காள்!

79. மனத்தினுற் செய்யும் சங்கற்பங்களினுலே தேகம் உண்டாகின்றது. நன்ருக விசாரித்துப் பார்த்தால் தேகமே ஆத்மாவென்னும் பிரமை நசித்துப்போகும். இவ்விதமாக அடிக்கடி பலமுறை விசாரித்துத் தெளிவதனுல் நன்மை விளையும். இந்த விசாரணையினுல் நீ மோக்ஷம் அடைந்து சுகம் பெறுவாய்.

80. கங்குல்வார் குழலினுளே!* உன்னைச் சூழ்ந்துள்ளவர்கள் செய்யும் துரோகங்களினுலும் அபகாரங்களினுலும் உனக்குக் குரோத குணம் பிறக்கும். அப்படிப்பட்ட வேளையில் அதிகமான விவேகத்தோடு பொறுமை மேற்கொள்வாயானுல், கோபத்தினுல் விளையத்தக்க கேடு நீங்கும். இதனை யுணர்ந்து நீ நடந்து கொள்வாயாக.

81. குழந்தைகளைத் துர்ப்பாஷையாகத்திட்டாதே. சொற்கள் அக்ஷரங்களால் அமைந்தவை. 'அக்ஷரம்' என்ருல் 'அழியாதது' என்று பொருள். நீ சொல்லும் வார்த்தையின் அர்த்தம் (பயன்) அழியாது. சொற்கள் பயன் தருவது நிச்சயமாதலால் எப்பொழுதும் சுபமான வார்த்தைகளையே சொல், அசுபமான வார்த்தைகளை ஒருபோதும் சொல்லாதே.

82. 'முண்டை' என்று முதலான வசைமொழிகளை அதிகமாக உபயோகிக்கிற சாதியார்களில் அமங்கலைகள் அதிகமாக இருக்கிறதைக் காண்கிருேம். 'பட்டுவிழுவாய்' என்று முதலா

* கருமைமிக்க கூந்தலுடையவளே!

கத் திட்டுகிற சாதியார்களில் அற்பாயுள்களும், வேறு விதமாகத் திட்டுகிற கீழ்ச் சாதியாருக்கு அதிக மக்களும் உண்டாவதைக் காண்க.

83. உலகத்தில் கண்ணுக்குப் புலப்படுகிற வஸ்துக்களெல்லாம் நசிக்கத்தக்கவைகளே என்னும் உண்மையை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளாவிட்டால் கஷ்டம்மிகும். இதனை யறிந்து எந்த வஸ்துவினிடத்தும் அதிகமான பிரமை கொள்ளாமல் சஞ்சரிப்பாயாக.

84. அறிவின்மையால் மோகம் பிறக்கும். அதனால் எல்லாக் காரியங்களும் கெடும். அவ்வறிவின்மை நல்ல நடவடிக்கையினால் நசிக்கும். இதனைத் தெரிந்து நல்வழியில் நட.

85. உயர் குலத்தினாலும் தனத்தினாலும் கல்வி முதலானவைகளினாலும் கர்வம் உண்டாகும். குலம் முதலானவைகளின் பெருந்தன்மையை ஆராய்ந்து பார்த்தால், அது மட்டில்லாமல் ஒன்றைவிட மேலான மற்றொன்று இருக்கிறதெனவே தோன்றும். இப்படிப்பட்ட நிதான புத்தியினால் கர்வத்தை யொழி.

86 நியாயத்திலும் உண்மையிலும் திருஷ்டியில்லாவிட்டால் மாச்சரியம் உண்டாகும். அதாவது, பிறருடைய நன்மையைக் கண்டு பொறாமை ஏற்படும். விவேகிகளோடு சகவாசஞ் செய்வதனால் அந்தக் குணம் குறையும். எப்பொழுதும் இதனை யெண்ணிப் பிழை.

87. எத்தனையோ ஜன்மங்களெடுத்து எத்தனையோ கஷ்டங்களனுபவித்தா லல்லாமல்

மானிட ஜன்மம் வராது. ஆதலால்,வந்த ஜன்மம் இருக்கும்போதே இம்மையிலும் மறுமையிலும் சுகம் பெறுவதற்கான வழியைத் தெரிந்துகொள்.

88. குழந்தாய்! மானிட ஜன்மமெடுத்தவர்கள் அழியாமல் எந்நாளும் உயிர்த்திருக்கப் போகிறதில்லை. பிறப்பு உள்ளவருக்கு இறப்பு உண்டென்பது நிச்சயம். ஆனுல், கீர்த்தி என்பது மாத்திரம் எந்நாளும் அழியாமல் இருக்கத் தக்கது. உலகத்தில் அழியாத வஸ்து அதனைத் தவிர வேருென்றும் இல்லை.

89. ஒருவர் செய்த துரோகத்தை ஸ்திரீயானவள் தன் மனத்தில் வைத்துக்கொள்ளக் கூடாது. நன்மையை மாத்திரம் மறவாமல் எப்பொழுதும் வைத்துக்கொள்ள வேண்டும். நல்ல நடவடிக்கைகளை வழக்கப்படுத்திக்கொள்ள வேண்டும். எல்லாரிடத்தும் அன்போடுவிவகரிக்கவேண்டும்

90. தாம்பூலந் தரிக்கும்போது பாக்கை மாத்திரம் முதலில் மெல்லலாகா தென்பது பெரியோருடைய வழக்கம். வெற்றிலையைக் கையிற் பிடித்துக்கொண்டு, பாக்கை வாயில் மென்றுகொண்டு, அயலார் வீட்டுக்குப் போய்ச் சுண்ணும்பு கேட்டால் ஏளனஞ் செய்வார்கள். பெரியவர்களுடைய நல்ல நடவடிக்கைகளைக் கற்றுக் கடைப்பிடித்துக் கௌரவம் பெறு.

91. தண்டார் குழலணங்கே! * தரையில் விழுந்த வெற்றிலையும் சுண்ணும்பு வைத்த வெற்

*குளிர்ச்சியான பூமாலை சூடிய கூந்தலுடையவளே!

றிலேயும் தாம்பூலத்துக்குப் பயன்படா. அவை களை உபயோகித்தால் தரித்திரம் நேரிடும்.

92. எப்பொழுதேனும் எங்கேனும் இருவர் தனித்துப் பேசிக்கொண்டிருக்கையில் ஒண்டி யொண்டி அவர்களண்டை போகலாகாது. அப் படிப் போனால் உன்னுடைய மரியாதை கெடும்.

93. தோகைமின்னே! * துடைப்பத்தினால் தள்ளுகிற தூசியும், முறத்தினால் நெம்புகிற தூசி யும், ஆட்டுக்கால் தூசியும் உடம்பின்மீது பட லாகாது. இப்படிச்சுபா சுபம் தெரிந்து நடந்து கொள்ளப் பயின்ற ஸ்திரீ கௌரவமும் பாக்கியமு முள்ளவளாவள்.

94. தீபத்தின் நிழலிலும், மனிதரின் நிழலி லும், தான்றிமரத்தின் நிழலிலும், கட்டிலின் நிழலிலும் ஒருபோதும் இருக்காதே.

95. நகங்களின் நுனியிலிருந்து நீர் சொட் டக்கூடாது. தலைமயிரிலிருந்து (கூந்தலிலிரு ந்து) நீர் சொட்டலாகாது. நகம் பட்ட நீரை யும், தலைமயிர் பட்ட நீரையும், உபயோகித்து மீந்த நீரையும் ஒருபோதும் வழங்காதே. அத னால் உனக்குத் தரித்திரம் உண்டாகும்.

---

* மயில்போன்ற மாதே!

II

1. பிறந்தகத்தில், பிள்ளாய்! முதன்மையாக நீ கௌரவிக்கவேண்டியவர்கள் உனது தாய் தந்தையர்களே. அவர்களிடத்தில் நீ விநயமாகவும் விதேயமாகவும் நடந்துகொள்ள வேண்டும். அவர்களுடைய வார்த்தையை இம்மியும் மீறலாகாது. அவர்களுடைய மனத்திற்கு வருத்தமுண்டாக்கத் தக்க காரியங்களைச்செய்யலாகாது, வார்த்தைகளைச் சொல்லலாகாது. அவர்கள் ஏவிய காரியத்தைச் சந்தோஷமாகச் செய்ய வேண்டும்.

2. உனக்குக் கல்வி கற்பிக்கும் ஆசானிடத்தில், தாய் தந்தையரிடத்துப் போலவே மரியாதையாகவும் வணக்கமாகவும் நடந்துகொள்ள வேண்டும். அவர்கள் போதிக்கும் பாடங்களைச் சிரத்தையாகக் கவனிக்க வேண்டும். அவர்கள் பாடஞ் சொல்லும்போது நீ தோழிகளோடு பேசிக்கொண் டிருக்கக்கூடாது. ஆசானெதிரில் சிரித்தலாகாது, உரத்துப் பேச லாகாது, துஷ்ட சேஷ்டைகள் செய்யலாகாது. அவர்களை அகௌரவப் படுத்தக் கூடாது.

3. பூமணக்குமேனிப் புரிகுழலே!* நீ முதன்மையாகக் கௌரவிக்க வேண்டியவர் உனது பதியே. அவரிடத்து நீ பக்தியும் அனுராகமும் கொண்டொழுகல் வேண்டும். அவருடைய சுகத்தையும் சந்தோஷத்தையுமே எப்பொழுதும் நீ கோரவேண்டும். அவருக்கு வெறுப்புண்டாக்கத் தக்க காரிய மெதனையும் நீ செய்யக்கூடாது.

*மலர்மணம் வீசுகிற தேகமும் சுருள்கூந்தலு முடையவளே!

4. கணவன் வெளியிலே போய் வாடிவதங்கி வீட்டுக்கு வந்த வுடனே, 'உப்பில்லை பருப்பில்லை, புளியில்லை, மிளகாயில்லை, அது இல்லை இது இல்லை' என்று அவரைத் தொந்தரவு செய்யக் கூடாது. நல்லாடைகளை வாங்கிக் கொடுக்க வில்லை யென்றுவது அவரை இடைவிடாமல் வேதனைப்படுத்தக் கூடாது.

5. அத்தியம்பன்ன விழியாமிழையே!* அக முடையானுக்கு அசமாதான முண்டாக்கத்தக்க வார்த்தைகளை ஒருபோதும் சொல்லாதே. அவர் ஏதேனுமொரு வேலையிட்டால் அதனை முணுமுணுத்துக்கொண்டு செய்யாதே. அவருக்குச் சந்தோஷ முண்டாகும்படியாகவே எப்போதும் நீ நடந்துகொள்.

6. புருஷன் வெளியில் வேலைசெய் து அலுப் புற்று வீட்டுக்கு வந்தபோது அவனுடைய அலுப்பையும் ஆயாசத்தையும் உன் உபசாரங்களினுல் ஆற்றி, அவனை நீ தேற்றவேண்டும். உன்னுடையமிருது மதுர வாக்கியங்களினுல் அவனுடைய சிரமத்தைத் தணிக்கவேண்டும். எவ் விதத்திலும் அவனுக்குச் சுகத்தையும் சந்தோஷத்தையும் நீ உண்டாக்க வேண்டும்.

7. மதுரமொழிமயிலே! மற்றெல்லாரையும் விட உன் கணவனே உனக்கு அதிகமானவன். அவனே உனக்குத் தெய்வம். அவனிடத்து நீ, ஆரணங்கே!† நிஜமான பக்தியும் பிரேமையும்

*யானைத்தோட்டியைப்போற் பாயும் பார்வையுடைய மெல்லியலே!

† அருமைப் பெண்மகளே!

உள்ளவளாய் மனப்பூர்த்தியாக அவனுக்குச் சேவை செய்தால் போதும்.

8. கொப்பணியு மாதே! கணவனுடைய சேவையைத் தவிரவேறொரு விரதமும் உனக்கு அவசியமில்லை. கணவனுக்குப் பணிவிடை செய்வதனாலேயே உன்னுடைய மனோபீஷ்டங்களெல்லாம் (கோரினவைகளெல்லாம்) நிறைவேறும். அன்றியும், மற்றெவருக்கு மில்லாத அதிசயமான சக்தியும் உனக்கு உண்டாகும்.

9. கோலமலர்த் திருவே!* கற்பின் பெருமை மிகப் பெரிது. பூர்வகாலத்துப் பதிவிரதைகள் மிகப் பெருஞ் சக்திவாய்ந்தவர்களாயிருந்தார்கள். அவர்களிற் சிலர் செய்த அற்புத காரியங்களை, அந்தஞ்சேர் கண்ணாய்!† பார்.

10. கற்பிற் சிறந்த சாவித்திரியானவள் தன் கணவன் மறுபடி உயிர்த்தெழவும், மாமனார் இழந்த கண்களைத் திரும்பப் பெறவும் இழந்தஇராச்சியத்தைப் பெறவும் செய்தாள். சந்திரமதி தன் கற்பின் மகிமையினால் காட்டுத்தீயை யவித்தாள். தமயந்தி தன்னைப் பீடித்த கிராதனை எரித்துச் சாம்பலாக்கினாள். அனசூயை தன் பாதிவிரத்திய மகிமையினால் திரிமூர்த்திகளையும் இளம்பிள்ளைகளாக்கினாள். கௌசிகன் என்னும் பிராமணனுடையபாரியை சூரியன் உதயமாகாமல் தடுத்தாள்.

11. பூவையே!‡ பதிவிரதா சிரோமணியானவள் எப்படி நடந்து கொள்ள வேண்டுமென்

* கோலமலர்த் திரு.—பதுமாசனி, இலக்ஷ்மி.

† அழகான கண்ணுடையவளே!

‡ பூவை.—கிளிபோன்ற பெண்மகள்.

பதை நன்ருகத் தெரிந்து நட. முன்னுளில் ஸரஸவாணி என்னுமொரு நாரீமணி இருந்தாள். அவள் மண்டனமிசிரன் என்னும் மகாபண்டிதனுக்குப் பாரியையாகி, ஸ்ரீ ஆதிசங்கராசாரியரையெதிர்த்துவித்தியாவாதஞ் செய்தாள். அவளுக்குள்ள அஸமான பாண்டித்தியத்தை யெண்ணி ஜனங்கள் அவளை ஸரஸ்வதியின் அவதாரமெனப் பாராட்டினுர்கள். அவளைக் கணவன் வீட்டுக்கு அனுப்பும்போது அவளுடைய தாய் தந்தையர் அவளுக்குக் கூறிய புத்திவாதத்தைக் கேட்டுக் கடைப் பிடிப்பாயாக:

12. "இன்று முதல் உனக்கு அபூர்வமான தசை உண்டாயிருக்கின்றது. இந்த நிலைமைக்குத் தக்கவாறு நீ நடந்துகொள். இளம்பிராயத்திற்குரிய விளையாட்டுகளை விட்டுவிடு. ஏனெனில், உன்னுடைய அந்த ஆட்ட பாட்டங்கள் எங்களுக்குச் சந்தோஷமாயிருப்பது போல மற்றவர்களுக்கு இரா.

13. "ஸ்திரீகள் விவாக மாவதற்குமுன்னுல் தாய் தந்தையரின் ஆக்கினையில் இருக்க வேண்டும். அதற்குப் பின்பு அவர்களுக்குப் பதியே கதி. ஆகையால், நீ பதியின் ஆக்கினையில் இருக்கக் கடவாய். இதனுல் உனக்கு இரண்டு உலகங்களிலும் கீர்த்தி யுண்டாகும்.

14. "பதிக்கு முன்னுல் எழுந்து ஸ்நானஞ் செய். அவர் போசனஞ் செய்யுமுன் நீ புசிக்காதே. பதி வேற்றூருக்குப் போயிருந்தால் நீ

R4 67786

பூஷணாதிகளைத் தரித்துக் கொள்ளாதே. இப்படி அருந்ததி முதலான பதிவிரதைகள் நடந்தது போல நடப்பதே உனக்குப் பூஷணம்.

15 "பதி கோபித்துக்கொண்டால் நீ எதிர் பேசாதே. அவருடைய கோபத்தை யெல்லாம் பொறுத்துக்கொள். நீ இப்படிச் செய்வதனால் அவர் உன்மீது கோபத்தை விட்டுப் பிரேமை பாராட்டலாவார். சாந்தத்திற்குச் சமானமானது எதுவும் இல்லை, மாதே!

16 "வீட்டில் பதி இல்லாத வேளையில் அதிதிகள் எவரேனும் வந்தால் அவர்களை வணக்கத்துடன் சம்மானித்து ஆதரித்து அனுப்ப வேண்டும். நீ அப்படிச் செய்யாவிட்டால் அவர்களில் எவரேனும் மகாத்மாவா யிருப்பாராயின், உன் குலமே நசித்துப் போம்.

17. "மாமியையும் மாமனாரையும் தாய்தந்தையரைப்போலக் கருது. மைத்துனன்மார்களை அண்ணன் தம்பிகளைப்போல எண்ணு. இவர்களுக்குக் கோபம் வந்தால், உனக்கும் உன் கணவனுக்கும் எவ்வளவு அந்நியோந்நியப் பிரேமையிருந்தபோதிலும், உங்களுககுள் வேற்றுமையை இவர்கள் விளைவிப்பார்கள்."

18. மாமி மருமகள் சண்டைகள் உலகப்பிரசித்தமாயிருப்பதை நீ கேட்டிருக்கிறா யல்லவா? அப்படிப்பட்ட சண்டைகளுக்கு நீ போகாதே. அந்தச் சண்டைகளினாலும், நாத்திமார் ஓரகத்திமார் ஆகிய இவர்களுடன் ஒற்றுமையில்லாமல் கலகிப்பதனாலும் வீடு காடாகும், உன் கணவனு

டைய சௌக்கியமும் மற்றவர்களுடைய சௌக்கியமும் கெடும், வீட்டில் சுகமே இராது, சந்தோஷமே இராது. அவர்கள் உன் மனத்தைக் குத்தும்படியான வார்த்தைகளைச் சொன்னபோதிலும், நீ செய்வதை யெல்லாம் குற்றமாகவே கிரகித்தபோதிலும், நீ பொறுமை பாராட்டு. பொறுமையே உனக்குப் பெருமை.

19. பஞ்சனடி மாதே!* பெரியவர் எவராயினும் அவரிடத்து அடக்கமும் ஒடுக்கமும் வாய்ந்து விவகரி. அவர்களுக்கு எதிரில் தடதடவென்று ஓடாதே, கெட்டியாகப் பேசாதே, கெட்டியாகச் சிரிக்காதே, மற்றொருவரோடு பரிகாசஞ் செய்துகொண்டிராதே. பெரியாருக்கு அகௌரவமுண்டாக்கத்தக்க காரியம் எதனையும் செய்யாதே.

20. அஞ்சுகமே!† எல்லாரோடும் எவரோடும் நல்ல வார்த்தைகளையே பேசு. உன்னுடைய சுகதுக்கங்களுக்குக் காரணமாயிருப்பது உன் வார்த்தையே யாதலால், பேசும் விஷயத்தில் மிக ஜாக்கிரதையாயிரு. நல்ல வார்த்தை பேசினால் எல்லாரும் மிக்க நல்லவர்க ளாவார்கள், கெட்ட வார்த்தைபேசினால் எல்லாரும் கெட்டவர்களாவார்கள்.

21. நுடங்கிடையே!‡ நல்லவார்த்தை பேசுவது கஷ்டமான காரியமன்று. அதனைவிடச் சுலபமான காரியம் வேறொன்று மில்லை. அது பணச் செலவில்லாத காரியம். ஆதலால், எல்லாரும்

* பஞ்சனடிமாது.—மிருதுவான பாதங்களை யுடையவள்.

† அஞ்சுகம்.—கிளி. ‡நுடங்கிடை.—நுடங்கு இடை=துவளுகிற இடையை யுடையவள்.

நல்ல வார்த்தைகளினுல் எல்லாரையும் நல்லவர் களாக்கிக்கொண்டு சுகத்தை யனுபவிக்கலாம். இந்தச் சுலபமான மார்க்கத்தைக் கைவிடாதே.

22. அள்ளயலாரோடு எப்பொழுதும் சிநேகமாக இருக்கவேண்டும். சிறிய விஷயங்களுக்காக அவர்களோடு சண்டைக்குப் போகக்கூடாது. எத்தனையோ சந்தர்ப்பங்களில் ஒருவருடைய சகாயம் மற்றவருக்கு வேண்டியிருக்குமாதலால், அவர்களிடத்தில் மிக்க சிநேகமுள்ளவளாய் நீ அவர்களுடைய சகாயத்தைப் பெற்று, சமயம் நேர்ந்தபோது அவர்களுக்குத் தகுந்த சகாயம் செய்துகொண்டு சுகமாக வாழ்வாயாக.

23. அணங்கரசே!* உத்தம குணமுள்ள ஸ்திரீயினுலே குலமும் செல்வமும் கீர்த்தியும் வளரும். அவளைவிடச் சிறந்ததேவதை இல்லை. நல்லொழுக்கமுள்ள கற்புடை மனைவியினுல் கணவனுக்கு விபத்துக்கள் நீங்கிச் சம்பத்துக்கள் உண்டாகும்.

24. உத்தமமாதர் ஒவ்வொருவரும் தம்குலத்தவர்க்கும் இனத்தவர்க்கும் இகபரமிரண்டிலும் நன்மை விளைவிப்பர். நல்லகுலத்திற் பிறந்து கோபம் நீங்கி, நற்குண நற்செய்கைகளிற் சிறந்து, உலகம் பழிப்பதற்கு இடங்கொடாமல், சத்திய விரதங்கெடாமல், நாயகனே கைலைநாயகனெனக் கருதி, தாய்வீடு முதல் அண்டையயலிற் செல்ல இச்சைகொள்ளாமல், தன் முன்றானையே தனக்குக் காவலாகக் கொண்டிருக்கும் உத்தமி

* அணங்கரசு.—பெண்ணரசு, ஸ்திரீரத்தினம்.

யாகிய பதிவிரதையினுல் புருடனுக்கும் மாமன் மாமிக்கும் தாய் தந்தையருக்கும் அழியாச் செல்வமுண்டாகும், ஆயுள் விருத்தியடையும், சத்துருபீடை துர்வியாதி துர்மரணம் சோகம்பயங்கரம் முதலிய யாவும் நீங்கும், அறமும் ஓங்கும்.

25. சுரிகுழலே !* சகுந்தலையைக் கணவனுடைய வீட்டுக்கு அனுப்புகையில் அவளுடைய க்ஷேமத்தைக் கருதித் தந்தையாகிய கண்வமாமுனிவர் அவளுக்கு உபதேசித்த புத்திவாதம் பருவப் பெண்கள் பாராட்டத் தக்கதாகும். ஏந்திழையே !† அதனைக் கேளாய்:

26. "பெரியோர்க்குப் பணிவிடைசெய். கணவன்வீட்டு ஸ்திரீகளிடத்தில் இனிய தோழிகளிடத்திற்போல நடந்துகொள். கணவன் ஒருவேளை உனக்கு அதிருப்தியாக விவகரித்தாலும் நீ கோபங்கொண்டு விரோதமாக நடக்காதே.

27. "வேலைப் பொருவிழி மெல்லியலே !‡ "வேலைக்காரர்களுடன் விவகரிக்கையில் அதிக தாக்ஷிணியம் பாராட்டு. செல்வம் பெருகுவதனுல் கர்வங்கொள்ளாதே. இப்படி நடந்தால் நீ 'கிருகிணி' (இல்லாள்) என்னும் பட்டத்திற்கு உரியவளாவாய். இதற்கு மாருக நடப்பவர்கள் குலத்திற்கு வியாதிகள் எனப் படுவார்கள்."

28. வளந்திகழுமானே !¶ விவாத சீலமுடையவள், தன் வீட்டுப் பொருளைத் திருடுகிற

---

* சுரிகுழல்.— தலையில் சுருட்டை மயிர்வாய்ந்த பெண்.

† அலங்காரமுற்ற பெண்ணே !

‡ வேலோடு போர்புரியத்தக்க கண்ணையுடைய கோமளாங்கி !

¶ அழகும் ஐசுவரியமும் பொலியப்பெற்ற பெண்ணே !

வள், பிறர்க்கு அனுகூலமா யிருப்பவள், பரிகாச மாகப் பேசுகிறவள், கணவனுக்குமுன் உண்ப வள், அடிக்கடி பிறர்வீட்டுக்குப் போகிறவள்— ஆகிய மனைவி பத்துப் பிள்ளைகளைப் பெற்றவ ளான போதிலும் தாக்ஷிண்ணிய மின்றிக் கணவனால் விட்டொழிக்கத் தக்கவளாவள்.

29. கருமைச் சாரங்கவிழி காரிகையே!* குலத்தின் பெருமையை வளர்க்கும் பெரு நோக்க முடைய பத்தினியானவள் வீட்டுக் காரியங்களில் வேலைக்காரியைப் போலவும், ஆலோசனை சொல் வதில் மந்திரியைப் போலவும், வடிவத்தில் இலக் குமியைப் போலவும், பொறுமையில் பூதேவி யைப்போலவும், சிநேகத் தன்மையில் தாயைப் போலவும் விவகரிக்கக் கடவள்.

30. மைக்கருங்கண் மாதே!† மகளிரை இளமைப் பருவத்தில் தந்தையும், யௌவனத்தில் கணவரும், முதுமையில் குமாரரும் காப்பாற்றுகி றவர்க ளாவார்கள்.

31. திங்கண்முக மானே!‡ தாயில்லாத பிள்ளையின் பிழைப்பு, கணவனில்லாத ஸ்திரீயின் யௌவனம், சாந்தமில்லாத தவத்தின் பயன், புளியில்லாத போஜனம்—இவை வீண்.

32. அலங்காரத்திற்கு வஸ்திரமும், போஜ னத்திற்குப் பிரீதியும், ஸ்திரீகளுக்குக் குணமும், அந்தணருக்குக் கல்வியும் அவசியமாம்.

---

* கருமையான மான் கண்ணுடையவளே!

† மைதீட்டிக் கருத்த கண்ணுடையவளே!

‡ சந்திரபிம்பம்போன்ற முகமுடையவளே!

33. நெருக்கான தோட்டுக் குழையணங்கே!*
நற்குணங்களுள்ள மனைவி அமிர்தத்திற்கு ஒப்பா
வாள்; குழந்தைகளின் மழலைச்சொற்கள், அரசர்
களின் சம்மானம், அன்புடன் அளித்த உணவு—
இவையும் அமிர்தத்திற்கு ஒப்பாகும்.

34. தன் கணவனுக்குத் தேஜசு வேண்டு
மென்று விரும்புகிறவள் அவனுடன் உட்
கார்ந்து சாப்பிடலாகாது; அன்னமருந்துதல்,
தும்முதல், கொட்டாவி விடுதல், கண்ணுக்கு
மை இட்டுக் கொள்ளுதல், அப்பியஞ்சனம்†
செய்தல், ஆடை களைதல், பிரசவித்தல்—ஆகிய
இவைகளை அவன் பார்க்கச் செய்யலாகாது.

35. தேனே! ஒருவர் உபயோகித்த வஸ்தி
ரம், பூஷணங்கள், பூமாலைகள், பானபாத்திரம்
இவைகளை மற்றொருவர் உபயோகிக்கக் கூடாது.

36. பொறுமை யுண்டெனின் கவசம் அவ
சியமில்லை, கோபம் உண்டெனின் வேறு சத்துரு
வேண்டாம். ஞாதி உண்டெனின் வேறு
நெருப்பு வேண்டாம்; நல்ல நண்பர்கள் உண்
டெனின் திவ்வியமான மருந்துகளால் என்ன
பயன்? துர்ஜனர்கள் சூழ்ந்திருந்தால் வேறு பாம்
புகள் வேண்டாம். கசடற்ற கல்வியுண்டெனின்
தனத்தினுல் பிரயோஜனம் என்ன? வெட்கம் உண்
டெனின் நகைகள் எதற்காக? நல்ல கவித்துவம்
உண்டெனின், இராச்சியத்தினுல் ஆவது யாது?

---

* நெருக்கமாகப் பொருந்திய ஓலை யணிந்த காதுடையவளே

† அப்பியஞ்சனம்.—எண்ணெய் தேய்த்துக்கொண்டு
நீராடல்.

37. ஆயிழையே !* ஆக்கள், அந்தணர்கள், வேதங்கள், பதிவிரதைகள், சத்தியவாதிகள், உலோபகுண மில்லாதவர்கள், ஈகைக் குண முடையவர்கள்—இவ் வெழுவராலே பூமி தாங் கப்பட்டு நிலைகொண்டிருக்கிறது.

38. கெண்டை விழி மாதரசே! கெட்ட சக வாசத்தைப் போலக் கேடு விளைவிக்கக் கூடியது வேறு எதுவுமில்லை. கெட்ட சகவாசத்தினல் கெ டாதவர் எவருமில்லை. ஆதலால், இவ் விஷயத் தில் பெண்கள் மிக்க சாக்கிரதையுள்ளவர்களா யிருக்கவேண்டும். க்ஷேமத்தை விரும்புகிறவ ரெ வரும் ஒருபோதும் கெட்ட சகவாசஞ் செய்யார். நிரைப்பாலை யொத்த நேரிழையே !† நல்ல சக வாசத்தினல் சுகமும் கீர்த்தியும் உண்டாகும்.

39. கெட்ட சகவாசத்தினல் திருட்டுத்தனம், பொய் சொல்லுதல், பிறர் வீடுகளுக்குப் போதல், வெற்று வார்த்தைகளில் காலங் கழித்தல், அமி தமாகச் செலவு செய்தல் முதலான துரப்பியாசங் கள் உண்டாகும். ஒரு நாழிகையிற் பழகுகிற துரப் பியாசத்தை ஒரு வருஷத்திற் போக்கடிப்பது கஷ்டமாகும். கெட்ட வழக்கங்கள் சீக்கிரத்திற் பிடிபடும். நல்ல வழக்கங்கள் அவ்வளவு எளி தில் பிடிபடா. ஆதலால், சுத்தமதி முகத்தாய் !‡ சாக்கிரதையா யிருக்கவேண்டும்.

---

*விசேஷாபரணங்க ளணிந்தவளே !

†பசும்பாலைப்போன்ற பெண்ணே !

‡களங்கமற்ற சந்திரனைப்போன்ற முகமுடையவ்ளே !

40. நிலவு மதிவதன நேரிழையே!* நெருப்பை வாயினுல் ஊதலாகாது, திகம்பரியான ஸ்திரீயைப் பார்க்கக்கூடாது, அக்கினியில் பரிசுத்தமில்லாத வஸ்துக்களைப் போடக் கூடாது. நாரியரே! நெருப்பின் மீது பாதங்களைக் காய்ச்சிக் கொள்ளலாகாது.

41. பிறைநுதலே! † பிராமணன் வித்தையினுல் பிரகாசிக்கிருன். க்ஷத்திரியன் வெற்றியினுல் பிரகாசிக்கிருன். செல்வம் உபகாரத்திஞலும் தானத்திஞலும் பிரகாசிக்கின்றது. குலப்பெண் லஜ்ஜையினுல் பிரகாசிக்கிருள். ஒழுக்கமே விழுப்பம்தரும்.

42. தெள்ளுமொழிமானே!‡ ஸ்திரீகள் யஜ்ஞஞ் செய்ய வேண்டியதில்லை; விரதமாவது உபவாசமாவது சிறிதும் அனுஷ்டிக்க வேண்டியதில்லை. பதிக்குச் செய்ய வேண்டிய பணிவிடைகளைச் சரியாகச் செய்வதனுலேயே அவர்கள் சொர்க்கலோகத்தை யடைந்து சுகிப்பார்கள்.

43. பூங்குழலாய்!$ பூமியிற் படிவதனுல் ஜலம் பரிசுத்தமாகின்றது, மாதர் கற்புடைமையினுல் பரிசுத்தராகிருர்கள், குடிகளுக்கு க்ஷேமத்தைச் செய்வதனுல் அரசன் பரிசுத்தனுகிருன், பிராமணன் சந்தோஷ சித்தத்தினுல் (திருப்தியினுல்) எப்பொழுதும் பரிசுத்தனுகிருன்.

---

*வெண்ணிலாவெனப் பிரகாசிக்கின்ற சந்திரமுகி!

†சந்திரப்பிறைபோன்ற நெற்றியுடையவளே!

‡தெளிவான வார்த்தைகளைப் பேசுகிறவளே!

$மென்மையான கூந்தலுடையவளே!

44. கனங்குழாய்!* கணவனே தெய்வம், கணவனே குரு, கணவனே தர்மம், கணவனே தீர்த்தம், கணவனே விரதம். ஆதலால், மனைவியானவள் மற்றெல்லாவற்றையும் விட்டுக் கணவனையே பஜித்துக்கொண்டிருக்க வேண்டும்.

45. சரமதண்டனைப் பிளக்கும் சாயகக் கண் மாதே!† சீலம் நிறைந்த மனைவி, மலர் நிறைந்த கொடி, அர்த்தம் நிறைந்த வார்த்தை—இவை அழகாகப் பிரகாசிக்கின்றன, எவர்க்கும் இனிமையாயிருக்கின்றன.

46. பூந்தடக்கையன்னமே! புத்திரப் பேறுடையவள், பாகம் (சமையல்) செய்வதில் திறமையுடையவள், பவித்திரமாக (பரிசுத்தமாக) இருப்பவள், பதிவிரதை, பதுமாக்ஷி (கமலம் போன்ற கண்ணுடையவள்) —மொழி முதலில் ப—உடைய ஸ்திரீகள் ஐவரும் உலகத்தில் கௌரவிக்கப்படுவார்கள்.

47. கைகளுக்கு ஈகையே ஆபரணம், அரசர்களுக்குப் பொய் சொல்லாமையே பூஷணம். எப்படிப்பட்டவர்களுக்கும் நீதியே பூஷணம். ஸ்திரீகளுக்கு மானமே ஆபரணமாகும்.

48. பாரியையானவள் வீட்டுக் காரியங்களைச் செய்யும்போது வேலைக்காரியைப் போலவும், ஆலோசனை சொல்லும் போது மந்திரியைப் போலவும், போஜனம் செய்விக்கும்போது தாயாரைப் போலவும் இருத்தல் தகுதி.

---

*வட்டமான காதணியுடையவளே!

†யமனைப் பிளக்கும் வாள் போன்ற கண்ணுடையவளே!

49. செய்யபங்கயப்பெண்ணே!* சொல்லுக்குப் பிராணன் சத்தியம்; கோட்டைக்குப் பிராணன் படைத்திரள்; மகளிர்க்குப்பிராணம் மானம்; சீட்டுக்குப் பிராணம் கைச் சாத்து (எழுதியவரது கை யொப்பம்).

50. சதாசாரம் தப்பாதவர்கள் நல்ல குடிப் பிறப்பு, தீர்க்காயுசு, ஐசுவரியம், அழகு, காணி யாட்சி, சொற்செலவு, கல்வி, ஆரோக்கியம் என்னும் எட்டு நன்மைகளையும் நிரம்பப் பெறுவர்.

51. தமக்கு மாத்திரம் ஆவதாக உலைவைத்துச் சமைத்தல் ஆகாது. தம்முடைய நிமித்தமாக ஓர் உயிரைக் கொன்று அதன் மாமிசத்தைக் கொள்ளலாகாது. மடைப் பள்ளியை எச்சிற் படுத்தலாகாது. வீட்டுத் தெய்வங்களுக்குத் திருவாராதனம் பண்ணி நிவேதனஞ் செய்த பிறகே உணவு செய்தல் வேண்டும்

52. அருமருந்தே! அளக்கும் படியை மணை மீதில் வைத்தலும், புது வஸ்திரத்தைத் தலைக் கடையில் பிரித்தலும் கூடா. தம்மை யறியாதவர்களின் எதிரில் நில்லாது ஒழிக.

53. கலியாணப் பந்தலின் கீழே துடைப்பம், செத்தை, பூவின் புறவிதழ், பழைய கரிப்பானை, கிழிந்த கட்டில் முதலானவைகளைப் பரப்பி வைக்கலாகாது.

54. நல்ல செல்வத்தை யடைய விரும்பும் பெண்கள் அதிகாலையிலெழுந்து வீட்டை விளக்கிப் பாத்திரங்களைக் கழுவி, வீடு முழுதும் சாணநீர் தெளித்து, நீர்ச் சால்களையும் கரகங்களையும்

*செந்தாமரைபோன்றவளே.

நிறைய மலரணிந்து, அதன் பின்பு அடுப்பி னுள் தீயை மூட்டுதல் வேண்டும்.

55. ஒருவரைப்பார்த்து, 'உங்களுடைய உட ம்பு நன்றாயிருக்கிறது' என்று சொல்லலாகாது. விளக்கை வாயினால் ஊதி அவித்தல் கூடாது. அடுப்பிலுள்ள நெருப்பின் சுடர் தம்மீது படும் படியாகக் குளிர் காய்தல் கூடாது.

56. பொற்புற்ற பொன்னே!* பெரியாரெதி ரில் சிரித்தல், கொட்டாவி விடுதல், காறியுமிழ் தல், தும்முதல் என்னு மிவைகளைச் செய்யற்க. செய்தால் பழி வளரும்.

57. நற்குலப் பெண்டிர் தம்முடைய கணவ ரது தேகத்தின் வடிவத்தை யன்றிப் பிறருடைய தேகத்தின் வடிவழகை வியந்து பாரார். தம் முடைய வடிவழகையும் (கண்ணாடி முதலியவற் றில்) வியந்து பாரார். தலை மயிரைக் கோதலும் கைந் நொடித்தலும் செய்யார்.

58. ஒருவர் கட்டிலின்மீது படுத்திருந்தால் அப்போது அவருடைய காலைக் கழுவுதலும், அவருக்குப் பூச் சூடுதலும், சந்தனம் பூசுதலும், அவர் அருகில் நிற்கலும் ஆகா. கிடந்தவர்க ளின் கட்டிலின்மேல் மிதித்தேறி நிற்கலாகாது.

59. ஒருவர் தலையில் முடித்த பூவைத் தம் முடைய தலையில் முடித்தலும், ஒருவர் மோந்த பூவைச் சூடுதலும் கூடா. பிறர் தலைக்குச் சூடிய பூவை மோத்தலாகாது; மோந்த பூவைச் சூட லாகாது. புலையருக்குத் தாம் உண்ட எச்சிற் பண் டங்களைக் கொடுத்தலாகாது.

---

* அழகிய பொன்போன்றவளே.

60. எந்த ஸ்திரீ தன் பர்த்தாவினிடத்திலே யே விரதம் பூண்டவளாய், அவரிடத்திலேயே பிராண முள்ளவளாய், மனப் பிரீதியோடு பணி விடையும் உபசாரமும் செய்துகொண்டு இருக்கி ருளோ அந்தப் புண்ணியவதியே தன் பர்த்தா வுடன் தர்மபாக முடையவளாவள்.

61. பாகுமொழிமாதே! பர்த்தா தரித்திரனு னுலும் இளைத்தவனுனுலும் வழி நடந்து களைப் புற்றவனுனுலும் அவனைப் பூசிக்கும் புண்ணிய ஸ்திரீயே தர்மசீலமுடையவளாவள்.

62. கணவனிடத்துத் தெய்வத்தினிடத்திற் போலப் பணிவிடைகளையும் உபசாரங்களையுஞ் செய்துகொண்டு அவனுக்கு வசப்பட்டவளாய், நற்புத்தி யுள்ளவளாய், நல்ல தோற்ற முடைய வளாயிருப்பதே பதிவிரதைக்கு லக்ஷணம்.

63. தன் புருடனிடத்தே செலுத்தப்பட்ட மனமுடையவளாய் அவனுடைய க்ஷேமத்தை நாடிக்கொண்டு, எப்பொழுதும் சாக்கிரதை யுள் ளவளாகிக் கஷ்டமான விரதத்தை அனுஷ்டிக் கிறவளே பதிவிரதை யெனப்படுவள்.

64. தினந்தோறும் மாமன் மாமிகளின் பா தங்களைச் சேவித்துக்கொண்டு, தாய் தந்தையரி டத்துப் பிரேமைபூண்டுள்ள குணவதியானஸ்திரீ யே தபோதன முடையவ ளெனப்படுவள்.

65. மது பானம், வியபிசாரிகளோடு சிநே கம், கணவனைவிட்டுப் பிரிந்து வேருயிருத்தல், எப்பொழுதும் தெருக்களில் திரிதல், தூங்கியாடி விழுதல், தன்காரியங்களை விட்டுப் பிறர் வீட்டுக்

குப் போயிருத்தல்—இந்தஆறுகுணங்களும் உத்தம ஸ்திரீகளுக்கு இரா.

66. தெள்ளிய இன்பமொழித் தெய்வமடவனமே!* நல்ல லக்ஷணமுள்ள ஸ்திரீ உடம்புக்கு மஞ்சளைப் பூசிக்கொண்டு குளிப்பாள், நெற்றியில் குங்குமப் பொட்டிடுவாள், கண் ணுக்கு மை தீட்டிக் கொள்வாள்.

67. புண்ணியாங்கனைகள் தமக்கு முக்கியமான பூஷணங்களையும் தமது சௌபாக்கியச் சின்னங்களையும் ஒரு பொழுதும் விடாமல் சர்வகாலமும் தரித்துக் கொண்டிருக்கவேண்டும். சுவாசினிகளுக்கு முக்கியமான பூஷணங்கள் மஞ்சள் குங்குமம் கரிவளையல்களு மாம்.

68. குல ஸ்திரீயானவள் தன் புருஷ னுக்கு உபசாரங்கள் செய்யும்போது தாஸியைப்போல் இருக்க வேண்டும்; தோற்றத்தில் லக்ஷ்மீதேவியைப்போல் இருக்கவேண்டும் (அதாவது, குங்குமம் இட்டுக்கொண்டிருக்க வேண்டும்; தாம் பூலந்தரித்துக் கொண்டிருக்க வேண்டும்; தலையை வாரிக்கொண் டிருக்கவேண்டும்; சுசியா யிருக்க வேண்டும். இவை முதலான லக்ஷணங்கள் பொருந்தி யிருக்கவேண்டும்); பொறுமையில் பூதேவியைப்போல் இருக்கவேண்டும்; அன்ன மிட்டுப் போஷிக்கும்போது தாயைப்போல் விவகரிக்க வேண்டும்.

69. தோகையரே!† ஸ்திரீயானவள் தன் கணவனே சிரேஷ்டமானவ னென்றெண்ணி

---

*மடவனம்.—அழகிலும் நடையிலும் அன்னப்பறவைக் கொப்பான பெண்.

†மயில் போன்ற மாதர்களே.

அவனிடத்து விரதம் ஆசரிப்பதே புண்ணியமாகும். அதுவே தவமெனப் படும்; அதுவே சொர்க்கத்தை யளிக்கத் தக்கதாகும்.

70. கற்புடைய மாதர் தம் வீட்டை விட்டு வெளியில் அடி வைப்ப தென்பது பாம்புப் படத்தின்மீது அடிவைப்பது போன்றதென எண்ணுவார்கள்; அயல் வீட்டுக்குப் போவது தீவாந்தரம் போவதாகுமென நினைப்பார்கள்; உலோபியினுடைய பணம் பிறருக்கு எப்படிக் கிட்டாதாகுமோ அப்படி அவர்களுடைய வாய்ப்பேச்சுப் பிறருக்குக் கிட்டாதாகும்.

71. "சுபகரமான நடவடிக்கை, பூஷிக்கத் தக்க சத்திய விரதம், பிரியமான பார்வை, சௌபாக்கியம், நற்குணங்கள் ஆகிய இவைகளோடு கூடிய பதிவிரதா ஸ்திரீயினிடத்தில் நான் வசிக்கின்றேன்" என்று லக்ஷ்மீதேவி சொல்லி யிருக்கிறாள். ஆதலால், மேற்சொல்லிய லக்ஷணங்களோடுகூடிய ஸ்திரீ வசிக்குமிடத்து ஸ்ரீ லக்ஷ்மீதேவி குடியிருப்பாள்.

72. எவனுடைய பாரியை பரிசுத்தமானவளாகவும், சமர்த் துள்ளவளாகவும், எப்பொழுதும் பர்த்தாவை யனுசரித்து நடப்பவளாகவும், எக்காலும் பிரிய வசன மாடுகிறவளாகவும் இருக்கிறாளோ அவளே லக்ஷ்மி யெனப்படுவள். லக்ஷ்மி லக்ஷ்மியல்லள்.

73. குலஸ்திரீகள் தம் கணவரால் போஷிக்கப்படினும், போஷிக்கப் படாவிடினும், தமது பதிவிரதா தர்மத்தை விடாமல் பதியையே தியானித்துக்கொண்டிருப்பார்கள்.

74. வாசங் கமழ்குழலாய்!* வீட்டுக் காரியங் களில் கெட்டிக் காரியாகவும், புத்திரவதியாகவும், கணவனே கதியென்று இருப்பவளாகவும், கணவனிடத்தே விரதமுள்ளவளாகவும் இருக்கிறவள் மனைவி யெனப்படுவள்.

75. "கிள்ளைக் குதலைமின்னே!† கணவனைக் கண்டவுடனே எழுந்து நில். அடக்கத்துடன் பேசு. அவன் உறங்கினபின் உறங்கு, அவன் எழு முன் எழு" என்று பெரியோர் தம் புத்திரிகளுக் குப் போதிப்பார்கள்.

*நறுமணம் வீசுகிற கூந்தலுடையவளே.

†கிளியைப்போல இனிமையாகப் பேசும் பெண்ணே.

III

1. சாந்திலை யென்னும் பதிவிரதாஸ்திரீயானவள் புண்ணியலோகம் பெற்றுக் கண்ணியம் வாய்ந்து, பாக்கிய பொக்கிஷமென விளங்கினுள். அவள் அந்தப் பதவி தனக்கு வாய்த்த வரலாற்றைக் கைகை என்பவளுக்கு எடுத்துரைத்தாள். விவரம் வருமாறு:—

2. "இந்தப் பதவி எனக்குப் பதிவிரதா தர்மத்தினுல் வந்தது. மகத்துவமுள்ள பதிவிரதா தர்மத்தை நான் ஆசரித்தபடி சொல்லுகிறேன். நான் எனது மாமனுருக்கும் மாமியாருக்கும் வழிபட்டு அன்பு பாராட்டி, நாளுக்கு நாள் அதிக மரியாதை உபசாரங்களை இயற்றுவேன். அவர்கள் ஒரு பொருளைக் கேட்குமுன்னமே அதனை விரும்பிக் கொடுப்பேன்.

3. "அவர்களுடைய பாதங்களை விளக்கிப் பூசை செய்து நமஸ்காரம் பண்ணி, ஆசீர்வாதம் பெறுவேன். குணக்கேடில்லாமல்வணக்கமாகவும் இணக்கமாகவும் மரியாதையுடன் அவர்கள் சொன்னபடி பிணக்கில்லாமற் கேட்பேன்.

4. "வயிற்றிற்பிறந்த பெண்போல அவர்களை வாஞ்சித்து, எதிர்த்து உத்தரம்பேசாமல், பொறுத்துப் புகழ்ந்து, புறங்கூரு விரதம் பொருந்தியிருந்தேன். சகலபுவன கர்த்தாவுக்கும், தென்புலத்தாருக்கும்*, விருந்தினருக்கும், அதிதிகளுக்கும், இல்லற தேவதைகளுக்கும் பூசை நைவேத்தியங்கள் செய்து, முகமலர்ந்து இனிமை யுரைத்து அகமகிழ்வேன்.

---

*தென்புலத்தார் = பிதுருக்கள்.

5. "வீட்டு வேலைக்கு மிஞ்சின வேலை இல்லையாதலால், இதுவே பிரதானமென் றெண்ணி, தேகவருத்தம் சோம்பல் தூக்கம் இளைப்பு ஆயாசம் இன்பம் துன்பம் எதுவும் பாராமல், இரவும் பகலும் ஏமாறுமல், என் வீட்டு வேலையை இன் ெனாருவர் கையிற் கொடாமல், என்னுல் இயன்ற மாத்திரஞ் செய்வேன்.

6. "மேலும், அவ் வீடு வாசல் திண்ணை தெருப்புறம் முதலிய இடங்களில் எச்சில் துப்பல் ஈளை தூசு தும்பு குப்பை கூளம் இராமல் விளக்குவேன். வாசற்காலுக்கு விபூதி தொட்டு, குங்குமப் பொட்டிட்டு, பூமாலை கோத்திட்டு, மாவிலை ஆர்த்திட்டு, பார்த்தவர் யாவரும் என்ன லக்ஷ்மீகரமா யிருக்கிறதென்று சொல்லும்படி பரிசுத்தப்படுத்துவேன்.

7. "வீண் பேச்சுகளும் பிறர்ஏச்சுகளும் பேசேன். விருதா மனிதருடன் உறவாடேன். காலை நீட்டிக்கொண்டு கதைகாரணம் பேசேன். அம்மனை கழங்கு பள்ளமாங்குழி முதலியன ஆடி, வருகிறவர்களையும் போகிறவர்களையும் உட்கார வைத்துக்கொண்டு விண்ணுணம்* நீட்டி, வீணுகிய டம்பம் காட்டமாட்டேன்.

8. "புருஷன் மாமனுர் மாமியார் பிள்ளைகள் இவர்கள் இறந்தால் அழுவதற்கான பாட்டை ஆராய்ந்து கற்கமாட்டேன். சுபசோபனுதிகளுக்குச் சொல்லத்தக்க மங்கள லாலிகளைக்கூறி, புலந்தரன் தூது அல்லியரசாணிமாலை நல்லதங்காள் கதை கண்ணகிகதை முதலான சில்லறைச் சரித்

*விண்ணுணம் = விஞ்ஞானம்.

திரங்களைக் கேட்டு, இந் நீட்டுப்பாட்டுக்கு வீட்டிலுள்ள அரிசி மிளகாய் சாறு சோறு துணிமணிகளைக் கொடுக்க மாட்டேன்.

9. "யாவரிடத்தும் சிரித்து விளையாடி, ஓடியமான† வார்த்தைக ளாட மாட்டேன். ஒருகு கொண்டை சொருகு கொண்டை போட்டு, அதனில் மலர்மாலை சூடி, அந்தக்கொண்டை சரியத் தன்னொத்த பெண்டுகளின்மீது சாயமாட்டேன். உரிய ஆண்மகன் இல்லாதபோது அலங்கோலமாக ஆடிப்பாடிக்கொண் டிருக்கமாட்டேன்.

10. "புகையிலை பாக்கு வெற்றிலை முதலியவைகளை ஒருவருக்கொருவர் மாற்றி, ஓமலேற்றி‡ ஏமாற்றமாட்டேன். ஊர்ப்பேச்சு, நாட்டுப்பேச்சு, ஒருவனை விட்டொருவனைத்தொடரும்எச்சுமுதலானவைகளைப் பேசிக்கொண் டிருக்கமாட்டேன்.

11. "பெண்ணனமே!$ பெருமூச்சு விட்டுத் தூங்கிக்கொண்டிருந்து வீட்டுவேலையை வேலைக்காரர் வேலைக்காரிகள் வெள்ளாட்டிகள் முதலானவர்களைப்பார்க்கச்சொல்லமாட்டேன். அவர்களை ஆக்கச் சொல்லி, சுசி முதலியன இல்லாமல், பண்டம்போவது வருவது தெரியாமல், பொருட்படுத்தாமல் இருக்கமாட்டேன்.

12. "புருடன் முதலியவர்கள் வந்தால் வேலைக்காரியைக் கூவி, அவர்களுக்குச் சோறு முதலிய பரிமாறச்சொல்லித் தாங்கள் அண்டை அசலுக்குப் போகிற பெண்டுகளாகிய வண்டர்க

---

† ஓடியமான:—சபைக்கு அடாத, பரிகாசமான.

‡ ஓமல்:—ஊர்ப்பேச்சு.

$ பெட்டை அன்னப்பறவையே.

ளைப்போல் என்னுயிர் ஒழிந்தாலும் உடல் அழிந்தாலும் ஒருகாலும் நடக்கமாட்டேன்.

13. "எனக்குத் தெய்வஸ்தலம் தேவாதிகளுலகம் குருவாச்சிரமம் மோக்ஷ வீடு ஆகிய இவையெல்லாம் நான் இருக்கும் குடிசைதான். இதனைவிட வேறே இடம் போயறியேன். சர்வேசுவரன் நம்மை இல்லறமங்கையாக ஏற்படுத்தி, நம் வீடு தேடிவந்த அதிதி அப்பியாகதி பிதுருக்கள் முதலானவர்களை உபசரியென்றும், பர்த்தாவுக்கு ஊழியப் பணிவிடை புரிந்திடுக என்றும், இல்வாழ்க்கையிலிருந்தே கடைத்தேறுகஎன்றும், விதித்தது நமக்கு அப்பால் மோக்ஷவீட்டை யளிப்பதற்கு அடையாளமாக வல்லவோ?

14. "ஆதலால், இந்தக்குடிசைவீடே எனக்குக் கோகனக* புரமாகும். வீட்டைச் சுத்தி செய்து ஆசாரமாக வைத்திருந்தால் அதுவே நமக்குக்கோவில், ஸ்தலம், குளம், தர்மம் ஆகிய இவையெல்லாமு மாயிருக்குமென் றெண்ணி நான் சந்தோஷித் திருப்பேன்.

15. "உதயத்திற்கு முன்எழுந்துமலசலவாதிகள் கழித்து, தந்த சுத்தி செய்து நாக்கு வழித்து வாய் கொப்பளித்து, தெருவாசல் வீடெல்லாம் திருத்திப் பெருக்கி மெழுகி மொக்கிட்டு, பாத்திரம்சுத்திசெய்து வைத்து, விழுப்பாகிய பண்டங்களை விலக்குவேன். ஸ்நானமாடி நித்திய விதி நேமங் கூடி, சூரிய நமஸ்காரஞ்செய்து ஈசுவர பூசை முடித்து, இஷ்ட தெய்வமான நாயகனுக்கு நடத்த வேண்டிய உபசாரங்களை யெல்லாம் குறைவில்லாமல் நிறைவாகச் செய்வேன்.

*கோகனகம் = செந்தாமரை.

16. "பின்பு, மாமி மாமனரை உபசரிப்பேன். ஈசனுற் கிடைத்திருக்கின்ற வஸ்துவைப் பக்குவப் படுத்தி அவர்களுக்கு வாய்க்கு உருசியாகக் கொடுத்துவிட்டு, பிற்பாடு கணவனுக்குப் போசனமிட்டுத் தாம்பூலந் தந்து, அவர் வெளியே போகிறவரையில் அவரைவிட்டு நீங்காமல் அவருக்கு ஆலவட்டம் முதலிய ஆதரணை பண்ணிக் கொண்டிருப்பேன்.

17. "பிறகு, அதிதிகளுக்குப் பூசை புரிந்து பணிவிடையாற்றிப் பற்பல பண்டங்களையும் வஞ்சனை நினையாமல் அன்னத்தோடு வைத்து உண்பிப்பேன். பசுக்களைக் குளிப்பாட்டிக் குங்குமமிட்டு, நீருடன் புல்லருத்தி, ஆலயங்களுக்கு அபிஷேகப் பால் வார்ப்பேன்.

18. "காரிகையே!* உறவினரை யுபசரித்து, வேலைக்காரரும் என்னைப்போற் சாப்பிடும்படி விதரணையாக விசாரிப்பேன். வீட்டுவேலைகளையெல்லாம் நிதானித்து, எந்தெந்தச் சாமான்கள் இல்லையோ அவைகளைச் சேகரிப்பேன் வருவாரும் போவாரும் கேட்ட கேள்விக்கு வார்த்தையுரைப்பேன். வம்பு வசனங்களுக்கு இடங்கொடாமல் மறுப்பேன். அரைக்கணமேனும் சோம்பலில்லாமல் இருப்பேன்.

19. "எந்த விதத்தில் விழுப்பு வந்தாலும் உடனே ஆசூச ஸ்நானம் பண்ணுவேன். அமுதுக்கு வந்த பெரியோர்களைக் கண்டு அகாலமென்று சொல்லாமல், அப்போதே சமையல் செய்து அரை நொடிக்குள் பசியாற்றிப் போற்றுவேன். எத்தனை பேர் அமுதுக்கு வந்தாலும் சற்

---

*அழகுடைய பெண்ணே.

றேனும் மனமிளைக்கேன். எனக்கும் என் துணைவனுக்கும் வேண்டுமென்று ஒரு பதார்த்தமாகிலும் மறைத்து வைக்காமல் அவர்களுக்கு யதார்த்தமாகப் படைப்பேன்.

20. "எழிலணங்கே!* என் மணவனே தெய்வமென்று கனவிலும் மறவாமல் வழிபடுவேன். அவருடைய சொல்லுக்கு மல்லுக்கட்டி வார்த்தையாடேன். அவரது தம்பி தமயன் முதலிய சுற்றத்தாரும் மற்ற நத்தத்தாரும் நன்மை கொண்டாடத் தக்கதாக இருப்பேன். அவர்களைத் தாழ்ச்சியில்லாமல் விசாரிப்பேன்.

21. "மாதரசே! முன் முரணிப் பின் புறணி கூறேன். இவ்விடத்துப் பேச்சை அவ்விடத்திலும், அவ்விடத்துப் பேச்சை இவ்விடத்திலுமாக கோட்சொல்லிக் கலகம் விளக்கேன். பெற்றோர்க்கும் பிறந்தார்க்கும் சண்டை யுண்டாக்கேன். பொறுமைப்படேன். பொய்பேசேன். வீணாசை கொள்ளேன்.

22. "வாடை நல்லாய்!† வீட்டு உடைமையை ஒருவருக்கு வீணிற் கொடேன். செல்விருந்து வருவிருந்து பார்த்துச் சீவன் முத்தரைச் சிந்தித்துக் கொண்டிருப்பேன். சொல்வார் பேச்சைக் கேட்டு மல்லுக்குப் போகேன்.

23. "என் சாமிக்கும் மாமிக்கும் மாமனுக்கும் வேண்டிய பதார்த்தங்களை விரும்பித் தேடிக் கொணர்ந்து பாகமாகச் சமைத்துப் பக்குவமாகப் பகுப்பேன். அப்படிப் பகுக்கும்போது ருசியான

---

*அழகும் இளமையும் வாய்ந்தவளே.

†நன்மணமுடையவளே.

கறிகாய்களை, அவர்கள் வாய்மலர்ந்து கேட்கு முன்னமே, தாய் பரிந்து ஊட்டுந்தன்மைபோல் அளிப்பேன். என் நாயகனுக்கு ஊழியஞ்செய்கிற பணிவிடையாளரைப் பக்ஷமுள்ள பிள்ளைகளைப்போல் இரக்ஷிப்பேன்.

24. "இவையன்றியும், என் கணவன் வீட்டைவிட்டு வேலைநிமித்தம் வேறோர் ஊருக்குப் போயிருந்தால் சந்தன புஷ்ப பரிமளாதிகளை விரும்பேன்; மஞ்சள் குங்கும தாம்பூலாதிகளைப் பொருந்தேன். தலை சீவிக் கொண்டையிட்டுக் கொள்ள மாட்டேன்; பூஷணாலங்கிருதம் பொருந்தேன்; நல்ல வஸ்திரம் உடுக்கேன்.

25. "மாருக்கவினணங்கே!* ஊருக்குப் போனவர் வந்த பிறகு மேற்சொல்லிய அலங்காரங்களுடன் எதிர் நின்று, அவர் கண்டு களிக்க, நான் இன்புறுவேன். உள்ளூரில் வெளியே போயிருநது வீட்டுக்கு வரும் என் காதலனைக் காணுமளவும் நான் முந்திச் சாப்பிடமாட்டேன்.

26. "இலையில் அன்னத்தைப் படைத்துவிட்டு, 'உப்பில்லை, ஊறுகாயில்லை, மிளகு இல்லை, மிளகாயில்லை, புளியில்லை, பூண்டில்லை, அரிசி, கட்டை, வறட்டி ஒன்றுமில்லை, என்று முன்னின்று, மிடற்றைப் பிடிப்பதுபோல், சொல்லமாட்டேன். தாம்பூலந் தரித்துக்கொண்ட சமயம் பார்த்து, நான்கு நாளைக்குச் சாமக்கிரி இருக்கும்போதே முன்னடிச் சொல்லிச் சாக்கிரதைப் படுத்திக்கொள்வேன்.

---

*என்றும்மாருத அழகுடையவளே.

27. "அகமுடையானுடைய சம்பாத்தியத்திற்குத் தக்கபடி செலவு செய்வேன். தாய்வீட்டுப் பக்ஷம் வைத்துச் சம்பாத்தியத்தை முடிப்புக் கட்டி அடிக்கடி தாய்மனைக்கு ஏகேன். 'வாழ்மனைப் பண்டம் தாய்மனைக் கேகில் தாய்மனை பாழ்மனையாகும்' என்ற வாக்கியத்தை யறிவேன்.

28. "நாயகன்மீது நாட்டிய கண்ணை மற்றொருவர்மீது நாட்டேன். பெரியவர்களுக்குப் பேரன்புடன் பூசைபுரிந்து போசனம் இடுவேன். வயிற்றிற் பிறந்த பிள்ளை யானாலும் உடன்பிறந்த சகோதரனானாலும் ஏழுவயதுக்கு மேற்பட்டவரை முகம்பார்த்துப் பேசமாட்டேன். மூன்றுனையைக் அக்கினிக்கோட்டைக்காவலாகக் கொண்டு முழுமதியோடும் கற்புடைமையாகிய பொக்கிஷத்தைக் காப்பேன். கற்புடைமையென்னும் பூஷணமிருந்தால் திரிமூர்த்திகளும் மதித்துத் துதிப்பார்கள்.

29 "கைகையே! புருடன் தன்னுடைய சப்பாத்தியத்தைப் பெண்சாதியிடம் கொடுத்து இருவருங் கலந்து ஒரு மனமாகப் பொருந்திச் சமுசாரம் நடத்தி வரும்போது, அப்படிப்பட்ட கணவனை அந்த ஸ்திரீயானவள் தெய்வமென்று எண்ணாமல் வஞ்சிக்கலாகாது. அவனுக்கு மிஞ்சின தெய்வம் இல்லை.

30. "மாதாபிதா குரு தெய்வம் என்று சொல்லப்பட்ட பிரபஞ்ச வாழ்க்கையெல்லாம் புருஷனே. மணவராகிய கணவருக்குப் பணிவிடை செய்யவும், உலகம் அபிவிருத்தியடையும்பொருட்